1992 செப்டம்பர் 21

4—

நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்குக் கட்டிடம்.

*10126—திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடப் பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜு, புதுப் பொலிவோடு வந்து இருக்கிறார்.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் உதகையில் முதன்மைக் கல்வி அலுவலகம் தற்போது ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மூன்று அறைகளில் இயங்கி வருகிறது. அந்த இடம் மிக்வும் பற்றாக்குறையாக உள்ளதினால் இந்த முக்கிய அலுவலகத்திற்கு கண்டிப்பாக ஒரு புதிய கட்டிடம் தேவைப்படுகிறது. ஆகவே, அரசு புதிய கட்டிடத்தை உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலம் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு ஒரு கட்டிடம் தேவை என்பதை அரசு நன்கு உணருகிறது. ஆனால் இந்த ஆண்டு அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நிதி நிலைமை சரியானதற்குப் பிறகு, அங்கிருந்து கருத்துரு பெறப்படுமேயானால் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டப்படும்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இதை ஒரு முன்னுரிமையாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1992 செப்டம்பர் 21

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டுக்கான கல்வித் திட்டங்களைப் பற்றிப் பரிசீலனை செய்கின்ற போது மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையும் எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

5—

பெரிய நகரங்களில் அரசு நடமாடும் மருத்துவமனை.

*9084—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரிய நகரங்களில் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களை உடனே காப்பாற்ற அரசு நடமாடும் மருத்துவமனை துவக்கப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) பெரிய நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் விபத்துப் பிரிவு தனியாக உள்ள காரணத்தால் நடமாடும் மருத்துவமனை துவங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் விபத்து மற்றும் அவசரப் பணிகளுக்காக முதற்கட்டமாக சென்னை நகரத்தில் 5.56 கோடி ரூபாய் செலவில் உலக வங்கி உதவியுடன் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு செயல் வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அந்தத் திட்டம் தொடங்கும் போது, கோவை, மதுரை, சேலம், திருச்சி—இப்படிப் பெரிய நகரங்களில் விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களை வாகனங்கள்வந்து எடுத்துச் செல்வதற்கு வாடகை டாக்சிகள் கூட வருவதற்குத் தயங்குகின்ற வேளையில் அரசு ஆஸ்பத்திரிக்கு போன் செய்து, அவர்களும் ஆம்புலன்ஸ் அனுப்புவதற்கு ஒரு மணிநேரம் ஆவதற்குள் அந்த விபத்தில் காயப்பட்டவர்கள் இறந்து விடுகிற சூழ்